Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.76 /2016

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனிச்சாமி | Father/Husband Name | : மாரிமுத்து நாடார் |
| Age | : | Calling | : |
| Date | : 12.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 12day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிகள் ஆஜர்

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் தளவாய்புரத்தில் குடியிருந்து கொண்டு ரைஸ்மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி ஆனந்தகிருஷ்ணன் எனது சகலை ஆவார், அவர் தற்போது இறந்துவிட்டார். 2013ம் வருடம் 8ம் மாதம் ஒருநாள் ராஜா மாரிமுத்து என்பவர் மதுரையிலிருந்து திருச்சி செல்லும் ரோட்டில் ஒத்தக்கடை அருகே விபத்தில் இறந்துவிட்டார் என தகவல் தெரிந்து நானும், ஆனந்தகிருஷ்ணன் மற்றும் உறவினர்களும் வந்தோம். காலையில் 10.30 மணிக்கு ஒத்தக்கடை போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளதுபோல் சம்பவ இடத்தை வரைபடமாக வரைந்து என்னிடமும், ஆனந்தகிருஷ்ணனிடமும் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் தற்போது காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2ம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த 2ம் சாட்சி கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

எனது ஊர் ராஜாபாளையத்தில் உள்ள தளவாய்புரம் என்றால் சரிதான். எனக்கு வயது என்ன என்றால் 69 வயது. என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த ஆனந்த கிருஷ்ணன் என்னுடைய ஊர்க்காரர் என்றால் சரிதான். அவர் எனது உறவினர் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன மாரிமுத்து எனது மாமா ஆவார். விபத்தில் இறந்தவர்கள் எனது ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் காலை 09.00 மணிக்கு தெரிய வந்தது. அதன்பின்னர்தான் எங்கள் ஊர் ராஜபாளையத்திலிருந்து நான் புறப்பட்டு வந்தேனா என்றால் எங்கள் ஊரிலிருந்து வந்துகொண்டிருந்தபோது எனக்கு தகவல் கிடைத்தது, நான் மருத்துவமனை சென்று அதன்பின்னர் சம்பவ இடம் வந்தேன். நான் மருத்துவமனைக்கு சென்று விபத்தில் காயம்பட்டவர்களை பார்த்துவிட்டுதான் விபத்து நடந்த இடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான்.

2) நான் மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்தவர்களை பார்த்துவிட்டு சுமார் 1 மணி நேரம் அல்லது 1/2 மணி நேரம் கழித்து விபத்து நடந்த இடத்திற்கு வந்தேன் என்றால் 1 மணி நேரத்தில் வந்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல், நான் சம்பவ இடத்திற்கு சொன்ன நேரத்தில் வரவில்லை, -இறந்துபோனவர் எனது உறவினர் என்பதனால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.